**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திருமதி.வெ.மோனிகா, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2026 ம் ஆண்டு ஜுலை மாதம் 28 ம் நாள் செவ்வாய்கிழமை

**இ.ம.எண்.2/2024 அதன் அ.வ.எண்.505/2024**

1. இளங்காமணி
2. சுப்புலெட்சுமி
3. சரஸ்வதி
4. பால்முருகன்

(3 ம்வாதி மனநிலை பாதிக்கப்பட்டவர்
என்பதால் அவரது தாயாரும் பொது
அதிகார முகவருமான 1 ம் வாதி மூலம்) ... மனுதாரர்கள்/வாதிகள்

–எதிர்–

1. சண்முகசுந்தரம்
2. காளியம்மாள்
3. முருகராஜ் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பாக 16.07.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சரவணன் அவர்கள் ஆஜராகியும், 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சண்முகம் அவர்கள் ஆஜராகியும், 1, 3 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாக உள்ள நிலையில், இரு தரப்பு வாதங்களையும் கேட்டு, ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, மனு தபசில் சொத்துக்களை மனுதாரர்கள் அமைதியான முறையில் கூட்டனுபவம் செய்வதை எதிர்மனுதாரர்களோ, அவர்களது

வகையாட்களோ யாதொரு இடையூறும் செய்யக்கூடாது என இந்த வழக்கு முடியும் வரை ஒரு இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டியும், அதே வகைக்கு இம்மனு முடியும் வரை ஒரு தற்காலிக இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்க உத்தரவிட வேண்டியும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்**

2.1. தபசில் சொத்துக்களானது சண்முகம் என்பவருக்கு பாத்தியப்பட்டது. மனு தபசில் சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களைப் பொருத்து மேற்படி சண்முகம் என்பவரின் குமாரரான ஆயிரம் என்பவருக்கு 28.05.2009 தேதியிட்ட பரிபூரண ஏற்பாடு ஆவண எண்.2922/2009 மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்துள்ளார். மனு 1ம் தபசில் சொத்து பரிபூரண ஏற்பாடு ஆவணத்தில் 29 வது அயிட்ட சொத்தாகவும், மனு 2ம் தபசில் சொத்து 16 வது அயிட்ட சொத்தாகவும் உள்ளது. மனு 1ம் தபசில் சொத்தில் 1ம் மனுதாரரின் கணவரும், 2 முதல் 4 மனுதாரர்களின் தகப்பனாரான லேட்.ஆயிரம் வீடு கட்டி குடும்பத்துடன் வசித்து வந்தார்கள். மேற்படி 1ம் தபசில் சொத்திற்கு மேற்படி ஆயிரம் பெயரில் சொத்து வரி செலுத்தப்பட்டும், மின் இணைப்பும் அவரது பெயரில் இருந்து வருகிறது.

2.2. மனு 2ம் தபசில் சொத்து மேற்படி ஆயிரம் என்பவருக்கு பாத்தியப்பட்ட காலி மனையாகும். மேற்படி 2ம் தபசில் காலி மனையில் மனுதாரர்கள் மாட்டு தொழு அமைத்து, ஆடு, மாடுகள் கட்டியும் ஏரு குழியும் அமைத்து அனுபவம் செய்து வருகிறார்கள். இந்நிலையில் மேற்படி ஆயிரம் என்பவர் எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் மனுதாரர்களை வாரிசுகளாக விட்டு விட்டு 21.05.2011ம் தேதி இறந்து விட்டார். மனு தபசில் சொத்துக்களை மனுதாரர்கள் மேற்படி லேட்.ஆயிரம் என்பவரின் சட்டப்படியான வாரிசுகள் நிலைமையில் அனுபவம் செய்து வருகிறார்கள். மனு தபசில் சொத்துக்களைப் பொருத்து

எதிர்மனுதாரர்கள் அந்நியர்கள் ஆவார்கள். 1ம் தபசில் சொத்திற்கு தெற்கு பக்கம் உள்ள இடத்தில் 2ம் எதிர்மனுதாரர் கடந்த 2011ம் ஆண்டு வீடு கட்டி வசித்து வருகிறார்.

2.3 மேற்படி வீட்டிற்கு மனு தபசில் சொத்துக்களில் வழிபாதை கிடையாது. 2ம் எதிர்மனுதாரர் கட்டியுள்ள வீட்டிற்கு கிழக்கு நோக்கி பாதை உள்ளது. ஆனால், 1ம் எதிர்மனுதாரர் சட்டத்திற்கு விரோதமாக மனுதாரர்களுக்கு கூட்டாக பாத்தியப்பட்ட மனு தபசில் சொத்துக்களில் வழிபாதை இருப்பதாக கூறி அனுதினமும் இடையூறு செய்து வருகிறார். மனு 1ம் தபசில் சொத்திற்கு மேற்கு பக்கம் 1ம் எதிர்மனுதாரர் வழிப்பாதை அமைப்பதற்காக சுவர் கட்டுவதற்காக குழி தோண்டினார். மேலும் 2ம் எதிர்மனுதாரர் வசித்து வரும் சொத்து நில அளவை எனக் கூறி மனு தபசில் சொத்துக்களில் அத்துமீறி நுழைந்து கல் நட்டுள்ளார்கள். மனு தபசில் சொத்துக்களைப் பொருத்து மனுதாரர்களின் கூட்டுரிமையை மறுத்ததோடு மட்டுமல்லாமல் மனு சொத்துக்களை அபகரிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் எதிர்மனுதாரர்கள் செயல்படுகிறார்கள் எனக்கூறி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

**<u>3. எதிருரை சுருக்கம்</u>**

3.1. மனுதாரர்கள் தாக்கல் செய்திருக்கும் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள சொத்துக்கும், எதிர்மனுதாரர்கள் சொத்திற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. எதிர்மனுதாரர் தன்னுடைய பாக இடத்தில் கடந்த 2 தலைமுறையாக ஆண்டு அனுபவம் செய்து வருகிறார். தாவா சொத்து மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது என்பது உண்மையில்லை. மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் இடம் வேறு. அதற்குரிய சர்வே நம்பர் வேறு. அந்த சர்வே நம்பர் உள்ள இடத்திற்கும், எதிர்மனுதாரர் இடத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. எனவே, மனுதாரர்கள்

கோரிய பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கக்கூடியதல்ல. எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இந்த மனுவை பொருத்தவரை இருதரப்பிலும், வாய்மொழி சாட்சியம் எதுவும் இல்லை. இரு தரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. இந்த மனுவை பொருத்தவரை தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர்கள் / வாதிகள் அசல் வழக்கில் கோரியவாறு இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.**

6. இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

7. மனுதாரர்கள் அசல் வழக்கின் வாதிகள் ஆவார்கள். எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கின் பிரதிவாதிகள் ஆவார்கள். அசல் வழக்கானது பிராது தபசில் சொத்தைப் பொருத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது விசாரணைக்காக கடந்த 10.09.2025 ம் தேதி முதல் நிலுவையில் இருந்து வருகிறது.

8. மனு தபசில் சொத்தானது 1ம் மனுதாரரின் கணவரான லேட்.ஆயிரம் என்பவரின் தந்தையான சண்முகம் என்பவருக்கு பாத்தியப்பட்டு, மேற்படி சண்முகம் என்பவர் லேட்.ஆயிரம் என்பவருக்கு கடந்த 28.05.2009ம் தேதியிட்ட பரிபூரண ஏற்பாடு ஆவணம் மூலம் பாத்தியப்படுத்திக்

கொடுத்துள்ளதாகவும், மேற்படி ஆயிரம் என்பவர் எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் கடந்த 21.05.2011ம் தேதி இறந்த பின்னர், அவரது வாரிசுகளான மனுதாரர்களுக்கு மனு தபசில் சொத்துக்கள் கூட்டாக பாத்தியப்பட்டு, அனுபவம் செய்து வந்த நிலையில், மனு 1ம் தபசில் சொத்திற்கு தெற்கு பக்கம் உள்ள இடத்தில் 2ம் எதிர்மனுதாரர் வீடு கட்டி வசித்து வருகின்ற நிலையில், மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட மனு தபசில் சொத்துக்களில் வழிபாதை இருப்பதாக கூறி எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்து வருவதாக கூறி மனு தபசில் சொத்துக்களைப் பொருத்து எதிர்மனுதாரர்களோ, அவரது வகையாட்களோ எவ்வித இடையூறும் ஏற்படுத்தக் கூடாது என இவ்வழக்கு முடியும் வரையில் தற்காலிக உறுத்துக் கட்டளை வழங்குமாறு மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

9. மனு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், அசல் வழக்கானது கடந்த 2024ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் இடைக்கால உறுத்துக்கட்டளை கோரும் இடைக்கால மனுக்களை மனு தாக்கல் செய்த 2 அல்லது 3 மாத காலத்திற்குள் முடித்து வைக்க வேண்டுமென்று வழிகாட்டு நெறிமுறைகள் கூறப்பட்டுள்ளது. இம்மனுவை பொருத்தவரை இடைக்கால உறுத்துக்கட்டளை கோரி மனு தாக்கல் செய்து 1 1/2 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. மேலும் அசல் வழக்கானது தற்சமயம் விசாரணை நிலையை எட்டிவிட்டபடியால், மனுதாரர்கள் / வாதிகளுக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? இல்லையா? என்பதை அசல் வழக்கின் விசாரணையின் இறுதியில் தான் முடிவு செய்ய இயலும் என்பதாலும், மனுதாரர்களுக்கு முதல் நோக்கு வழக்கு தற்போது இல்லை என்பதாலும், தற்போது இம்மனுவில் தற்காலிக உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்காவிட்டால் மனுதாரர்களுக்கு எந்தவிதமான இழப்பும் ஏற்படப் போவதில்லை.

10. மேலும் அசல் வழக்கானது விசாரணைக்காக 10.09.2025 ம் தேதி முதல் 10 மாதங்களுக்கு மேலாக நிலுவையில் இருந்து வருகிறது. இருந்த போதிலும், மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கின் விசாரணையை மேற்கொள்ள எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, அசல் வழக்கானது தற்போது விசாரணை நிலையில் உள்ளது என்பதால், நீதியின் நலன் கருதியும், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு இந்த மனுவானது அனுமதிப்பதற்கு உகந்ததல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியில், இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.**

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ம் ஆண்டு ஜுலை மாதம் 28 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VENKATACHALAM MONIKA
Orders uploaded on 28.07.2026
Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.07.28 18:29:19 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்</u> - இல்லை
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்</u> - இல்லை

VENKATACHALAM MONIKA
Orders uploaded on 28.07.2026
Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.07.28 18:29:25 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

முதன்மை மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**இ.ம.எண்.2/2024 அதன்**
**அ.வ.எண்.505/2024**

சீரான / வரைவு உத்தரவு
நாள். 28.07.2026.